# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 58/2018 | **CNR No.** | : | TNKI13-000065-2018 |
| **Name** | : | ராமானுஜம் | **Father's Name** | : | சுப்பிரமணி |
| **Witness for** | : | Defendant | **Calling** | : | DW2 |
| **Age** | : | 53 | **Village** | : | மேல்பதி |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11:30 AM | **End Time** | : | 11:45 AM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 21.10.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை, பிரதிவாதி சிவராஜ் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதியிடம் பிரதிவாதி கடன் வாங்கியுள்ளார் என்றும் அது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால் சரிதான், பைனன்சில் கடன் வாங்கியது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க அழைத்ததால் வந்துள்ளேன். வாதியிடம் எவ்வளவு கடன் வாங்கியதாக பிரதிவாதி சொன்னார் என்றால் பைனான்சில் ரூ.50,000/- கடன் வாங்கியதாக சொன்னார்.

(2) நான் தாக்கல் செய்துள்ள பிரமாணபத்திரம் யார் தயாரித்தது என்றால் வழக்கறிஞர் தயாரித்தார். எனது பிரமாணபத்திரத்தில் வாதியிடம் பிரதிவாதி ரூ.50,000/- கடன் வாங்கியுள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதி சிவராஜ் இரு சக்கர வாகனம் வைத்துள்ளார்

என்றால் வைத்துள்ளார் அதை சுமார் 10-15 வருடங்களாக வைத்துள்ளார் என்றால் சரிதான், தற்போதும் அதை தான் வைத்துள்ளார். நான் தற்போது மேற்படி இருச்சக்கர வாகனத்தில் தான் பிரதிவாதியுடன் நீதிமன்றத்திற்கு வந்தேனா என்றால் இல்லை, பேருந்தில் வந்தேன். பிரதிவாதி எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2-3 வருடங்களாக தெரியும். இந்த வழக்கை வாதி எவ்வளவு ரூபாய் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை, வாதி சென்னையனை தெரியாது. வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

(3) இது சம்பந்தமாக பிரதிவாதி எதாவது புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் எதற்காக புகார் கொடுத்தார் என்ற விவரத்தை எனது முதல் விசாரணை பிரமாணபத்திரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, புகாரின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. சிவராஜ் யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கினார் அதை எப்போது திருப்பி கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

(4) எனது ஊருக்கும் சிவராஜ் ஊருக்கும் எத்தனை கி.மீ என்றால் சுமார் 5-6 கி.மீ இருக்கும். எனது ஊருக்கும் சென்னையன் ஊருக்கும் எவ்வளவு கி.மீ என்றால் சுமார் 4 கி.மீ இருக்கும். பிரதிவாதி எந்த தேதியில் கடன் வாங்கினார் என்று சொல்லியுளேனா என்றால் இல்லை. பிரதிவாதி சிவராஜிக்கு சொந்தமாக வீடு மற்றும் ஆடு, மாடு உள்ளது என்றால் சரிதான். மணி, ஆறுமுகம் எனக்கு பிரதிவாதி அளவிற்கு பழக்கமானவர்களா என்றால் இல்லை. மணி, ஆறுமுகம் மற்றும் எனக்கு

இடையே கொடுத்தல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. கடந்த 20.06.2016 தேதியில் சென்னையனிடம் சிவராஜ் ரூ. 60,000/- கடன் வாங்கினார் என்றும் அதற்காக நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மணி மற்றும் ஆறுமுகத்திற்கும் இந்த வழக்கு கடனுறுதி சீட்டிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai